### புதுமைப் பெண் திட்டத்தின் அபார செயல்பாடுகள்:

# உயர் கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## தன்னம்பிக்கை தருகிறது – மாணவிகள் கருத்து!

சென்னை, ஜுலை 6–

தமிழ்நாடு அரசு அரசு அறிவித்துள்ள புதுமைப்பெண் திட்டத்தின் அபார செயல்பாடு குக்கிராமம் வரை சென்று சேர்ந்துள்ளது. எனவே, கிராம, சிறிய நகரம், நகர அரசு பள்ளிகளில் மட்டுமே உயர்க்கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. படிப்பு மட்டுமல்லாமல் மாதந்தோறும் 1000 ரூபாய் வருவாய் கொண்டு வரும் நபராகவும் மாணவி பருவத்திலேயே அவர்களை தமிழ்நாடு அரசு தனது புதுமை பெண்களாக உருவாக்கி உள்ளது.

தமிழ்நாட்டில் திமுக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, செப்டம்பர் 5 ஆம் தேதி தொடங்கப்பட்ட 'புதுமைப் பெண்' திட்டம். பெண் கல்வியை ஊக்கப்படுத்துதல், இடைநிற்றலைக் குறைத்தல், தமிழ்நாடு அரசின் சார்பில், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 வகுப்பு வரை பயின்று கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு மாதம்தோறும் ரூ. 1,000 உதவித்தொகை வழங்கப்படும் திட்டம் தொடங்கப்பட்டது.

பாலின சமத்துவம், குழந்தைகள் திருமணம் குறைத்தல், பெண்கள் அதிகாரம், கல்வி இடை நிற்றல் போன்ற பல பிரச்னைகளைத் தாண்டி, பெண்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் இத்திட்டத்தினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கொண்டு வந்தார். கடந்த 5 ஆண்டுகளில் பள்ளிப் படிப்பை முடித்து உயர்கல்வியை தொடர முடியாமல் கைவிட்ட ஆயிர கணக்கான மாணவிகள் இந்த திட்டத்தின் வாயிலாகத் தங்களது உயர்கல்வியை தொடர்கின்றனர்.

இதில் குறிப்பிடத்தக்க அம்சமே, பெண்களின் பெற்றோரும் ஆர்வத்துடன் தங்கள் பெண் குழந்தையை பட்டப்படிப்பு படிக்க பள்ளிக்கு அனுப்வும் ஆர்வத்தில் உள்ளனர்.

கல்லூரி அட்மிஷன் சமயத்தில் தமிழ்நாடும் முழுவதும் உள்ள அரசு கலை மற்றும் அரசு கல்லூரிகள், இன்ஜினியரிங் அதிகளவில் படித்து வருகின்றனர். அத்துடன் மருத்துவ துறையிலும் கால் பதிக்க துவங்கி உள்ளனர். இந்த இத்தனை சாதனைகளுக்கும் சொந்தக்காரர் ஒருவர் இந்தியாவில் இருக்கிறார் என்றால், அது தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தான். அதற்கு உதாரணமாக தமிழ்நாடு பெண்கள் அணி வாலிபால் போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்தது டன், முதல்வரிடம் ஆசியும் பெற்றனர். பதவியேற்ற குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய சாதனை. ஒன்றிய அரசின் நீட், ஜேஇஇ உள்பட பல்வேறு தேர்வுகளில் அதிரடியாக சாதனை படைத்து வருகின்றனர்.

அந்த அளவுக்கு பெண்களை இந்த அரசு தொடர்ந்து ஊக்கப்படுத்தி கொண்டிருக்கிறது. இப்போது, புதுமைப் பெண் திட்டத்தில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 202122ம் கல்வியாண்டில் 1,12,936 பேரும், 202223 ஆம் ஆண்டில் 8,11,49 பேரும் பயனடைந்துள்ளனர். பொறியியல் மாணவர் சேர்க்கை முடிவடைந்தவுடன் நடப்பாண்டு புதுமைப்பெண் திட்டத்தில் பயன் பெறப்போகும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். நடப்பாண்டில் உயர்க் கல்விகளில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

மேலும் சென்னை மாநிலக் கல்லூரி மற்றும் ராணி மேரிக் கல்லூரிகளில் அரசுப்பள்ளி மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளது. இத்திட்டம் குறித்து கல்லூரி மாணவிகள் கூறியதாவது, " திருமண உதவித்தொகையை மாற்றி புதுமைப்பெண் திட்டம் என்ற பெயரில் உயர்க்கல்வி உதவித்தொகையாக கொடுத்ததை வரவேற்கிறோம். இப்போது வயதுக்கு வந்துவிட்டால் திருமணம் என்ற பேச்சு கிராமங்களில் குறைந்துள்ளது. ஆனால், பிளஸ் 2 முடித்ததும் நீ கல்லூரியில் படி என்று பெண்களுக்கு கிராமங்களில், நகர்புறங்களில் உள்ள பெற்றோர் ஆதரவு தருகின்றனர்.

படிப்புக்காக பெற்றோர்களைச் சார்ந்து இருக்கத் தேவையில்லை. சொந்தப் பணத்தை செலவு செய்வதுபோன்ற எண்ணம் தோன்றுவதால் தன்னம்பிக்கை அதிகமாகிறது. இதுவே யாரையும் சார்ந்து இருக்காமல் சொந்த காலில் நிற்பதற்கு வேலைக்கு செல்லும் ஊக்கத்தை எங்களுக்கு அளிக்கிறது. மேலும் திருமணம் என்ற பெயரில் யாரோ ஒருவருக்கு எங்கள் பணத்தை கொடுப்பதற்கு பதிலாக, இத்தனை வருடம் எங்களை படிக்க வைத்த பெற்றோர்களுக்கு சிரமம் கொடுக்காமல் எங்கள் கல்விச் செலவுகளுக்கு நாங்கள் இதை பயன்படுத்திக்கொள்வது என்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

இவ்வாறு தெரிவித்தனர்.

**ஹெலன்டேவிட்சன் கருத்து:**

திமுக ஆட்சியில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தைப்பற்றி பேசிய திமுக மகளிர் அணி மாநில செயலாளர் ஹெலன் டேவிட்சன் கூறுகையில்: மூவலூர் ராமாமிர்தம் திட்டத்தினால் உயர்க்கல்வியில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பெண்கள் எப்போதுமே குடும்பத்தை கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொள்வதைபோன்று தன்னைக் கவனித்துக்கொள்ள மாட்டார்கள். அதனால்தான் திமுக அரசு அவர்களை அக்கறையுடன் பார்த்துக்கொள்கிறது. தொடர்ந்து இன்னும் பல சிறப்பு திட்டங்களை பெண்களுக்காக திமுக அரசு செய்துகொண்டே இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**தி.மு.க அரசு கொண்டு வந்த பெண்களுக்கான திட்டங்கள்**

பெண்களுக்கு அரசு பேருந்துகளில் இலவசமாக பயணம்: முதல்வராக பொறுப்பேற்றவுடன் கையெழுத்திட்ட 5 திட்டங்களில் அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம் என்ற அறிவிப்பால் இன்று லட்சக்கணக்கான பெண்கள் அரசு பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்து மாதத்திற்கு ஆயிரம் ரூபாயி லிருந்து ரூ.1500 ரூபாய் மிச்சப்படுத்தி வருகிறார்கள்.

**பெண்களுக்கு சமபங்கு:** இந்தியாவிலேயே முதன்முதலாக குடும்பத்தில் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு வழங்கப்படும் என்று சட்டம் 651989 அன்று திமுக அரசால் இயற்றப்பட்டது.

**மகப்பேறு விடுப்பு:** அரசுப் பணியாளர்களுக்கான மகப்பேறு விடுப்பு 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. பெண்களுக்கான திட்டங்களில் மிக முக்கியமானதாக பார்க்கப்படும் இத்திட்டம் அரசுப் பணியாளர்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**அரசுப் பணிகளில் இடஒதுக்கீடு:** அரசுப் பணிகளில் மகளிருக்கான இடஒதுக்கீட்டை 40 சதவீதமாக உயர்த்தியது பெண்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

**உயர்கல்வி உறுதித்திட்டம்:** அதிமுக அரசு பெண்களுக்கு வழங்கி வந்த திருமண உதவித் திட்டத்தை உயர் கல்வி உறுதித் திட்டமாக திமுக அரசு அறிவித்துள்ளது. மாணவிகள் தங்களது உயர்கல்வியைத் தொடரும் வகையில், 6 முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் அரசுப் பள்ளி மாணவிகளுக்கு மாதம்தோறும் ரூ. 1,000 நிதியுதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கல்லூரி, டிப்ளமோ படிக்கும் மாணவிகளுக்கு இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது. பெண்களுக்குத் தரும் நிதியுதவியை விட நிதி சார்ந்த சுதந்திரத்தை வழங்குதே முக்கியம்.

**நன்றி 'தினகரன்'**
05–07–2023

### வேலூரில் பசுமை வட்டச் சந்திப்பின் அளவைக் குறைத்து

# போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஒன்றிய அரசு நடவடிக்கை!

## வாக்குறுதி நிறைவேறியதாக கதிர் ஆனந்த் எம்.பி. அறிக்கை!



வேலூர், ஜுலை 6-

வேலூரில் பசுமை வட்டச் சந்திப்பின் அளவைக் குறைத்து போக்குவரத்து நெரிசலை குறைக்க ஒன்றிய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதன் மூலம் தனது தேர்தல் கால வாக்குறுதி நிறைவேறியுள்ளதாக டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

வேலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினரான எனது சீரிய முயற்சியின் பலனாக ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்திடம் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்று, தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம், கிருஷ்ணகிரி திட்ட அமலாக்க பிரிவு, 259/1 சேலம் மார்க்கம் கேசி பெட்ரோல் பங்க் பாஸ் கிருஷ்ணகிரி, தமிழ்நாடு 10/30/2050, சேலம் மெயின் ரோடு, கேஏகேசி பெட்ரோல் பங்க் அருகில், கிருஷ்ணகிரி, தமிழ்நாடு635 001.

எண். NHAI/11019/37/ PIUகிருஷ்ணகிரி பசுமை வட்டச் சந்திப்பு /2023/1555) கிருஷ்ணகிரி வாலாஜாப் பேட்டை NH4B (பழைய NH 46) பிரிவின் ஆறு வழித்தடங்கள் km D/000 முதல் Km 148/300 வரை தமிழ்நாடு மாநிலத்தில் NHDP கட்டம் V இன் கீழ் BOT (டோல்) DB FOT அடிப்படையின் கீழ் கிமீ.119+353 இல் உள்ள பசுமை வட்டச் சந்திப்பில் (க்ரீன் சர்க்கிள்) 119+353 கிமீ தூரத்தில் இருக்கும் சுற்றுப் பாதையை மாற்றியமைக்கவும், வடிகால் மற்றும் பாதுகாப்புப் பலகைகள் உட்பட தற்போதுள்ள சர்வீஸ் சாலையை அமைக்கவும்/ விரிவாக்கவும், தனித்தனி பொருள் விலையில் ரூ.7.76 கோடிக்கு தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (NHAI) ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்காக ஏலங்களை அழைப்பதற்கு ஏல ஆவணத்தை 04 நாட்களுக்குள் தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டும் என எல் என் மாளவியா இன்ஃப்ரா புராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், நிறுவனத்திற்கு துணை மேலாளர் (தொழில்நுட்பம்) எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற தேர்தலில் கொடுத்த வாக்குறுதியில் வேலூர் க்ரீன் சர்க்கிள் அளவு குறைத்து போக்குவரத்து நெரிசலை குறைக்க அளித்த வாக்குறுதியின்படி மேற்கண்ட பணிக்காக எடுத்த முயற்சிகள் பலன் அளித்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என்று கதிர் ஆனந்த் எம்.பி. தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் முதல் முறையாக – அரூர் அரசு மருத்துவமனையில்

# குழந்தை பெற்ற தாய்மார்கள் வீட்டிற்குச் செல்ல பிரத்யேக ஏசி வாகனம்!

## தருமபுரி செந்தில்குமார் எம்.பி. தொடங்கி வைத்தார்!



தர்மபுரி, ஜுலை 6-

தருமபுரி மாவட்டம் அரூர் மற்றும் பென்னாகரம் பகுதியில் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது . மருத்துவமனைகளில் குழந்தை பிரசவித்த தாய்மார்கள் மருத்துவமனையில் இருந்து வீடு செல்ல தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் டி.என்.வி.செந்தில் குமார் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு ஏசி வாகனங்களை வழங்கியுள்ளார் . வாகனம் பென்னாகரம் தலைமை மருத்துவமனை மற்றும் அரூர் தலைமை மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது. வாகனங்களை தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நடைபெற்ற நிகழ்ச்சியில் தருமபுரி எம்பி செந்தில்குமார் வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதில் செய்தியாளர்களிடம் பேசிய செந்தில்குமார் எம்.பி. தெரிவித்தாவது:

தருமபுரி நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து பென்னாகரம் மற்றும் அரூர் அரசு மருத்துவமனைகளில் பிரசவத்திற்கு பின்பு தாய் மற்றும் சிசு மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு அழைத்துச் செல்ல இரண்டு வாகனங்கள் மருத்துவ பணிகள் இணை இயக்குனரிடம் வழங்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசிடம் இரண்டு வாகனங்கள் கேட்டிருந்தோம். இரண்டு வருடங்கள் ஆகிறது. வழங்காத காரணத்தால் நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு வாகனங்களை வழங்கி இருக்கிறேன். கிராமப்புறத்தை சேர்ந்த மக்கள் பிறந்த குழந்தை ஆம்புலன்ஸில் வீட்டுக்கு அழைத்துச் செல்வதை தயக்கம் காட்டுகின்றனர். அதன் காரணமாக ஆம்புலன்ஸ் போல் அல்லாமல் சுற்றுலா வாகனம் போல ஏசி வசதியுடன் 12 நபர்கள் அமர்ந்து செல்லும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. பென்னாகரத்துக்கு வழங்கப்பட்ட வாகனம் பென்னாகரம் மற்றும் பாலக்கோடு பகுதிகளுக்கும் அரூர் பகுதிக்கு வழங்கப்பட்ட வாகனம் அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டிக்கு பயன்படும் வகையில் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. ஏசி பொருத்தப்பட்ட வாகனம் தமிழ்நாட்டில் இதுதான் முதன்முறை மக்கள் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பது தான் நாடாளுமன்ற உறுப்பினரின் கடமையாக கருதுகிறேன் இதனால் மன மகிழ்ச்சி கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் அடிக்கடி சாலை விபத்து ஏற்படும் தொப்பூர் பகுதியில் சாலை விபத்து தடுக்கும் வகையில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கமிட்டி அமைத்துள்ளனர். வனப்பகுதியில் 3.5 ஹெக்டேர் தனியாரிடமிருந்து 3.7 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. ஜனவரி மாதத்தில் வேலை தொடங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. மத்திய அரசிடம் தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக தரம் உயர்த்த கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒதுக்கீடு வரும் பொழுது நிறைவேறும் என்று நம்பிக்கை உள்ளது. தர்மபுரி மொரப்பூர் ரயில் திட்டத்தை பொறுத்த வரை நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் குறித்து விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. 70 சதவீதமான நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட பிறகு ரயில் பாதை அமைக்கும் பணி தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைமையில் 12 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# கண்ணீர் அஞ்சலி



முன்னாள் பொதுகுழு உறுப்பினரும்,
முன்னாள் சென்னை வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவரும்
சென்னை மாநகராட்சி 8வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினரும்
மொழிபோர் தியாகியும், லேட்.**எஸ்.நாராயணசாமி**
அவர்களின் மனைவியும், எனது தாயாருமான,

திருமதி. **N.பார்வதி**(எ)

# பார்வதிநாராயணசாமி

அவர்கள்

(வயது : 70)

உடல் நலக்குறைவு காரணமாக **05.07.2023** காலை 09.00
மணியளவில் **இயற்கை எய்தினார்.**
என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
அம்மையாரது இறுதி ஊர்வலம் **06.07.2023** மாலை 03.00
மணியளவில் எண் : 65/1,ஆரணிரங்கன் தெரு,
பழையவண்ணாரப்பேட்டை ,சென்னை–21, என்ற முகவரியில் உள்ள
எங்களது இல்லத்தில் இருந்து புறப்பட்டு **மூலகொத்தளம் இடுக்காட்டில்**
தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

...அன்னையை இழந்து வாடும்...

வழக்கறிஞர்.N.**மருதுகணேஷ்**

சென்னை வடக்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் அணி தி.மு.க

மற்றும் **குடும்பத்தினர்கள்**